# QB365 Question Bank Software Study Material

## வேலைவாய்ப்பும் வருமான கோட்பாடுகளும் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) "முழு வேலைவாய்ப்பு" வரையறு.

**பதில் :** லர்னரின் கூற்றுப்படி, முழு வேலை நிலை என்பது "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறி மாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது." என்கிறார்.

2) ஊரக வேலையின்மையின் முக்கியமான இயல்பு யாது?

**பதில் :** 1. இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும், குறைவான வேலைவாய்ப்பும் காணப்படுகின்றன.
2. கிராமங்களில் மறைமுக வேலையின்மையும், பருவகால வேலையின்மையும் நிலவுகின்றன.

3) உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.

**பதில் :** 1. உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.
2. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை, திறமைப் பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்கள் பற்றாக்குறை முதலான காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது.

4) தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக.

**பதில் :** 1. புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.
2. புதியன கண்டுபிடித்தலும் புதிய கருத்துகளும் வேலைவாய்ப்பினை உருவாக்கும்.
3. ஆனால் உழைப்பைச் சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப வேலையின்மையை உருவாக்கும்.

5) 'சே' விதியின் எடுகோள்களைப் பட்டியலிடுக.

**பதில் :** 1. ஒரு தனி வாங்குபவரோ, விற்பவரோ அல்லது உள்ளீடு பொருளோ விலையை மாற்ற முடியாது.
2. முழு வேலை நிலை நிலவும்.
3. உழைப்பு, பண்டங்கள் ஆகியவற்றின் அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவும்.

6) "விளைவுத் தேவை" என்றால் என்ன?

**பதில் :** விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும்.

7) தொகு அளிப்பின் கூறுகள் யாவை?

**பதில் :** தொகு அளிப்பின் நான்கு கூறுகளாவன :
1. மொத்த (விரும்பப்படுகிற) நுகர்வுச் செலவு (C)
2. மொத்த (விரும்பப்படுகிற) தனியார் சேமிப்பு (S)
3. நிகர வரிவசூல் (T)
4. தனிமனிதர் (விரும்பப்படுகிற) வெளிநாட்டவர்க்கு (உறவினர் மற்றும் நண்பர்கள்) கொடுக்கின்ற மாற்று செலுத்தல்கள், உதவித்தொகை ஆகியவை. இது $R_f$ (வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரண தொகை) என குறிக்கப்படுகிறது.

8) முழுவேலை நிலை என்றால் என்ன?

**பதில் :** நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை "கிடைப்பது முழுவேலை நிலை.

9) வளர்ந்த நாடுகளிலும் வளர்கின்ற நாடுகளிலும் உள்ள வேலையின்மைக்கான வேறுபாடு யாது?

**பதில் :** (i) வளர்ந்த நாடுகளில் வேலையின்மை என்பது தற்காலிகமாகவோ அல்லது. பிறழ்ச்சியாகவோ இருக்கலாம். (ii)ஆனால் வளர்கின்ற நாடுகளில் மூலதன உருவாக்கம் குறைவாக இருப்பதால் அமைப்பு சார்ந்த வேலையின்மை அதிகமாக இருக்கும்.

10) வருமான சமநிலையை எவ்வாறு நிர்ணயிக்கலாம்?

**பதில் :** (i) தொகு தேவை மற்றும் தொகு அளிப்பு அணுகுமுறை.
(ii) சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை

## 3 மதிப்பெண் வினாக்கள் 10 x 3 = 30

11) கீழ்க்காண்பவற்றைச் சுருக்கமாக எழுதுக.
அ. பருவ கால வேலையின்மை
ஆ. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை
இ. கற்றோர் வேலையின்மை

**பதில் : அ. பருவ கால வேலையின்மை :**
1. ஓர் ஆண்டில் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.
2. வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) முதலானவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும்.
3. இத்தகைய தொழில்களில் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது.

**ஆ. உடன்பாடில்லா வேலையின்மை :**
1. உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.
2. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமைப் பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்கள் பற்றாக்குறை முதலான காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது.

**இ. கற்றோர் வேலையின்மை :**
1. சில நேரங்களில் படித்துக் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.
2. இத்தகைய வேலையின்மைக்கு கற்றே வேலையின்மை என்று பெயர். தவறான கல் முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை, அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் முதலான காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

12) J.B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக

**பதில் : சே விதியின் விளைவுகள்:**
1. அதிக உற்பத்திக்கோ. வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.
2. பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால், முழு வேலை வாய்ப்பு வரை அவற்றைப் பயன்படுத்துவது
3. இலாபகரமாக இருக்கும். உற்பத்திக் காரணிகள் அவற்றின் உற்பத்தித் திறனுக்குச் சமமாக ஊதியங்களையும் ஏற்றுக் கொள்ளும்.
4. விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவையிருக்காது.
5. வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.
6. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்கமாட்டார்கள்.

13) கீன்சின் கோட்பாட்டை விளக்குக.

**பதில் :** 1. புதியப் பொருளாதாரக் கோட்பாடுகளின் வளர்ச்சியில், கீன்சு எழுதிய புத்தகமான "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு." ஒரு திருப்புமுனையாக இருக்கிறது.
2. கீன்சின் கோட்பாடு, முழு வேலைவாய்ப்பு கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலை நிலைக்கும் வாய்ப்பு இருப்பதை சுட்டுக்காட்டுகிறது.
3. கீன்சின் கோட்பாடு ஒரு பொதுக் கோட்பாடாகவேத் திகழ்ந்தது. இது எல்லா வகைச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.
4. கீன்சின் கருத்துகள் குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தன.
5. அவரது கருத்துப்படி, வேலைவாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும் போது உற்பத்திக் காரணிகளான மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.

14) தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக

**பதில் :** உழைப்பாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டப் பண்டங்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவையாகும்.

தொகு தேவையின் நான்கு பகுதிகளைக் (உட்கூறுகளை) கொண்டது :

2. முதலீட்டுத் தேவை
3. அரசுச் செலவு
4. நிகர ஏற்றுமதி - இறக்குமதி (Export - Import)
5. தொகு தேவையின் சூத்திரம் :

AD = C+I+G+(X-M)

15) தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக


**பதில் :** 1. ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு எனப்படும்.

2. தொகு அளிப்புச் சார்பானது வேலைவாய்ப்பு அளவோடு சேர்ந்து அதிகரிக்கும்.

3. தொகு அளிப்பு என்பது தேவையான உற்பத்தியை நாட்டில் அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தேவையான உழைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் பிற பண்டங்கள் பயன்படுத்துவதைக் குறிக்கும்.

$= C+S+T+R_f$

4. வரைபடம் வேலைவாய்ப்புக்கும், எதிர்பார்க்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது.




5. சுழியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும்போது உள்ள நிலையையும் மற்றொரு ($Z_1$) வேலைவாய்ப்பைப் பொருத்து பணக்கூலி மாறும் போது உள்ள நிலையையும் விளக்குகின்றன.

6. Z கோடு நேர்கோடாகவும், $Z_1$, கோடு குறிப்பிட்ட நிலைக்கு பிறகு வளைகோடாகவும் இருக்கிறது.

7. $ON_f$ அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது. அதற்குப் பின்பு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது.

8. எனவே, $N_f$ க்குப் பின்னர், தொகு அளிப்புக் கோடு செங்குத்தாக நெகிழ்வற்றதாக உள்ளது.

16) தொன்மையியத்தையும் கீன்சியத்தையும் ஒப்பிடுக.(ஏதேனும் ஐந்து)

**பதில் :**

| வ. எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பணத்தின் பணி என்பது பரிமாற்றத்திற்கும், சேமிப்பிற்கும் உதவும் | பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும் |
| 4. | நாட்டின் சிக்கல்களைத் தீர்க்க பேரியல் அணுகுமுறை தேவை. | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல். |
| 5. | அரசின் தலையீடு உண்டு | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது |
| 6. | வட்டி வீதம் மாறிக் கொண்டே உள்ளது. | வட்டி வீதம் மாறாதது. |

17) விவசாயம் சார்ந்த தொழிலுக்கான எடுத்துக்காட்டு தருக.

**பதில் :** சர்க்கரை தொழில், எண்ணெய், பேப்பர்

18) தொகு தேவை என்றால் என்ன?

**பதில் :** ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மேல் குடும்பங்களும், நிறுவனங்களும், அரசு மற்றும் வெளிநாட்டவரும் செய்கின்ற மொத்த செலவு தொகையே தொகு தேவை எனப்படும்.

19) அமைப்புசார் வேலையின்மை என்றால் என்ன?

**பதில் :** (i) சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது.
(ii) ஒரு பொருளுக்கான தேவை குறைதல் அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல் இரு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவை இவ்வகை வேலையின்மைக்கு காரணம். (உ.தா) கைபேசியின் தேவை அதிகரித்தால் கேமராவின் தேவை குறைந்துள்ளது.

20) தொன்மை அறிஞர்களின் அனுமானங்கள் என்ன?

**பதில் :** (i) முழுவேலை நிலை
(ii) கூலியும் விலையும் நெகிழ்ச்சி மிக்கது.
(iii) சந்தையில் போட்டி நிலவும்
(iv) அரசு தலையிடாக் கொள்கை

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 5 x 5 = 25

21) வேலையின்மைகளின் வகைகளை விவரி.

**பதில் :** வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிமனிதர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும். தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.

**வணிகச் சுழல் வேலையின்மை:**
கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சுழல் வேலையின்மை என்று பெயர்.

**பருவகால வேலையின்மை:**
ஓர் ஆண்டில் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்கள் கரும்பு, பருத்தி முதலானவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டும் நடைபெறும்.

**தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை :**
உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.

**கற்றோர் வேலையின்மை :**
சில நேரங்களில் படித்துக் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர்.

**தொழில் நுட்ப வேலையின்மை :**
புதிய தொழில்நுட்பம், மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

**அமைப்புசார் வேலையின்மை :**
1. சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது.
2. ஒரு பொருளுக்கான தேவை குறைதல் (eg. Type Machine, Tape recorder, Radio, Camera etc) அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல், இடு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்குக் காரணமாகிறது.

**மறைமுக வேலையின்மை :**
தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும்.

22) சேயின் அங்காடி விதியினைத் திறனாய்வு செய்க.

**பதில் : J.B.சேயின் சந்தை விதியின் திறனாய்வுகளாவன:**

1. கீன்சின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.
2. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.
3. பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது.
4. தனிமனிதர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும்,' வணிகர்கள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள் ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.
5. சேயின் அங்காடி விதியானது, அளிப்பு தன் தேவையைத் தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால், அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது.
6. முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை உள்ளதால் முழு வேலை வாய்ப்புக்கு வாய்ப்பில்லை என்று கீன்சு கூறுகிறார்.
7. அளவுக்கு அதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் என கீன்சு கருதுகிறார்.

23) ADF, ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.


**பதில் :** கீன்ஸின் வேலைவாய்ப்புக்கோட்பாட்டில் ADF & ASF சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

1. நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.
2. மேலும் நுகர்வுச் சார்பு நேர்கோடாகவும், முதலீடு தன்னிச்சையானது எனவும் கீன்சின் கோட்பாடு ஊகிக்கிறது.

கீன்சின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

i. தொகு தேவை, தொகு அளிப்பு அணுகுமுறை.

ii. சேமிப்பு, முதலீடு அணுகுமுறை. மொத்த தேவை, மொத்த அளிப்பு அணுகுமுறை இவ்வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளது.




3. தொகு தேவையும், தொகு அளிப்பு 'E' எனும் புள்ளியில் சமநிலை அடைகின்றன.
4. இப்புள்ளியில் வேலைவாய்ப்பு $N_o$ ஆக இருக்கும். $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு N1 $R_1$ ஆக இருக்கும் ஆனால் $M_1N_2$ அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களால் முடியும்.
5. எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய வேண்டிய உற்பத்தியின் அளவு $M_1R_1$ ஆகும்.
6. இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்.
7. சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவார். ஏனெனில் $N_o$ நிலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகு தேவை, தொகு அளிப்பை விடக்குறைவாக இருக்கும்.
9. ஆகவே வேலைச் சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவைக் கருத்து முக்கியப் பங்கு வகுக்கிறது.


24) தொன்மைக் கோட்பாடு, கீன்சு கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

**பதில் :**

| வ. எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | நாட்டின் சிக்கல்களைத் தீர்க்க பேரியல் அணுகுமுறை தேவை. | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் |
| 4. | பணத்தின் பணி என்பது பரிமாற்றத்திற்கும், சேமிப்பிற்கும் உதவும் | பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும் |
| 5. | அரசின் தலையீடு உண்டு | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது |
| 6. | வட்டி வீதம் மாறிக் கொண்டே உள்ளது. | வட்டி வீதம் மாறாதது. |
| 7. | முதலாளித்துவம் முரண்பாடுகளைக் கொண்டது. | முதலாளித்துவம் சரியானது. |
| 8. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு - முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது. | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு முதலீடு சமத்துவம் முன்வைக்கப்படுகிறது |
| 9. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. | சேமிப்பு, முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. |
| 10. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது. | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |
| 11. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |

25) தொகுதேவை சார்பை வரைபடத்துடன் விவரி.

**பதில் :**




(i) உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று, தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ
அதுவே மொத்த தேவை.

(ii) வேலைவாய்ப்பு அதிகரித்தல் மற்றும் குறைதல் ஆகியவற்றிற்கு ஏற்ப மொத்த தேவை கூடும் அல்லது குறையும்.

(iii) முதலீடு மொத்த வளைகோடு அதிகரிக்கும் விகிதத்தில் அதிகரிக்கின்றது.

(iv) பின்பு இவ்வளைகோடு குறையும் விகிதத்தில் குறைகின்றது. வேலைவாய்ப்பு அதிகரித்தால் வருமானம் அதிகரிக்கும்.

(v) ஆனால் வருமானம் அதிகரித்த வீதத்தில் பொருளாதாரத்தில் செலவு அதிகரிப்பது இல்லை.

(vi) மாறாக, குறைந்த விகிதத்தில் அதிகரிக்கிறது என்பதை வரைபடம் விளக்குகிறது;